ஆண்டு அறிக்கை 2020

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்

உள்ளடக்கம்

அத்தியாய	அறிமுகம்	
1.1	தொலைநோக்கு, செயற்பணி மற்றும் தரக் கொள்கை	01
1.2	தாபனத்தின் கட்டமைப்பு	02
அத்தியாய	மூலோபாயச் செயற்றிறன்	
2.1	தலைவரின் செய்தி	03
2.2	பணிப்பாளர் நாயகத்தின் செய்தி	04
2.3	செயல் திட்டம்	12
அத்தியாய	ஆளுகை மற்றும் ஊதியம்	
3.1	சபையின் விடயங்கள்	19
3.2	முகாமைத்துவச் சபை	19
3.3	முகாமைத்துவக் குழு	20
3.4	உள்ளகக் கணக்காய்வுகள்	21
3.5	ஊதியம்	22
அத்தியாய	செயற்றிறன் சிறப்பம்சங்கள்	
4.1	தொழில்நுட்பக் கைமாற்றங்கள்	23
4.2	ஆராய்ச்சி, முன்னேற்றம் மற்றும் புத்தாக்கம்	24
4.2.1	தொழில்நுட்ப முன்னேற்றம	24
4.2.2	கைமாற்றத்திற்குத் தயாரான தொழில்நுட்பம்	27
4.3	தொழில்நுட்பச் சேவைகளில் முன்னேற்றங்கள்	27
4.3.1	புதிய சேவைகள்	27
4.4	உட்கட்டமைப்பின் முன்னேற்றம்	29
4.5	தேசிய பிரச்சினைகளுக்கான பங்களிப்புகள்	31
4.6	தேசிய கருத்திட்டங்களுக்கான பங்களிப்புகள்	32
4.7	மனித நலனுக்கும் மற்றும் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்குமான தொழில்நுட்பம்	34
4.8	புதிய முன்னெடுப்புகள்	37
4.9	கூட்டுமுயற்சிகள்	38
அத்தியாய	தீழ்ப்பினை கண்காணித்தல் மற்றும் தணித்தல்	
5.1	கழிவுநீர் பரிகரிப்பு	40
5.2	வளி தீழ்ப்புக் கட்டுப்பாடு	40
5.3	இரைச்சல் கட்டுப்பாடு	41
அத்தியாய	நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தி	
6.1	தொழில் புள்ளிவிபரங்கள்	42
6.2	தர உத்தரவாதம்	46
6.3	தகவல் சேவைகள்	46
6.4	விருதுகள்	47
6.5	ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல்	47
6.6	கடல்கடந்த பயிற்சி செயற்றிட்டங்கள்	48
6.7	உள்நாட்டுப் பயிற்சி செயற்றிட்டங்கள்	51
6.8	மேம்படுத்தல் நிகழ்வுகள்	52
அத்தியாய	நிதிசார் செயல்நிறைவேற்றம்	
7.1	கணக்காய்வு அறிக்கை	53
அத்தியாய	ஆராய்ச்சி விளைவுகள்	

8.1 வெளியீடுகள் 57
8.2 தொடர்பாடல்கள் சர்வதேசம் 61
8.3 நூல்கள், நூல் அத்தியாயங்கள் மற்றும் வழிகாட்டல்கள் 62
8.4 ஆக்கவுரிமைகள் 63
8.5 விண்ணப்பிக்கப்பட்டுள்ள ஆக்கவுரிமைகள் 63
நிறைவேற்றுப் பணியாளர்கள் 64

அத்தியாயம் 01: அறிமுகம்

1.1 தொலைநோக்கு செயற்பணி மற்றும் தரக் கொள்கை

தொலைநோக்கு

தேசிய அபிவிருத்திக்கு விஞ்ஞானம் மற்றும் கைத்தொழில் ஆராய்ச்சியில் திறமையின் நிலையமொன்றாக விளங்குதல்.

செயற்பணி


இலங்கை மக்களின் நன்மைக்காக துரிதப்படுத்தப்பட்ட கைத்தொழில் அபிவிருத்திக்காக புத்தாக்க ஆராய்ச்சியையும், அபிவிருத்தியையும் நடத்துதலும் அத்துடன் சர்வதேசரீதியில் போட்டிக்குரிய தொழில்நுட்ப சேவைகளை வழங்குதலும்.

தரக் கொள்கை

ISO/IEC 17025:2017 மற்றும் ISO 9001: 2015 ஆகிய தரங்களுக்கும் அத்துடன் தேசிய தரக் கொள்கைக்கும் இணங்கும் விதத்தில், வாழ்க்கைத்தொழில் செயற்பாடுகளுக்கும் மற்றும் தர நோக்கங்களைத் தாபிப்பதன் மூலமும், மதிப்பாய்வதன் மூலமும் தொடர்கின்ற அபிவிருத்தியின் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் அதன் செயற்பாடுகளின் தரத்திற்கும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் உச்சநிலை முகாமைத்துவம் தடங்கலின்றி அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளது.

சேவைகளின் தரம் ஒருபோதும் இணக்கப்படுவதில்லை என்பதுடன், தரத்திலான முகாமைத்துவ முறைமைகளைப் பேணுவதன் ஊடாக வாடிக்கையாளரின் திருப்தியை ஆகக்கூடுதலான மட்டத்திற்கு சாதிப்பதற்கும் அத்துடன் குறிப்பிடப்பட்ட முறைகளுக்கும் அத்துடன் வாடிக்கையாளர்களின் தேவைப்பாடுகளுக்கும் இணங்க அதன் வாடிக்கையாளர்களுக்கு சுதந்திரமானதும் பாரபட்சமற்றதுமான உண்மையான தரவுகளை வழங்குவதற்கும் நிறுவனத்தின் சகல பணியாளரும் முயற்சிக்கின்றனர். கை.தொ.நி. பணியாளர்களும் QMSஇன் செயல்திறனை தொடர்ந்து மேம்படுத்துவதில் உறுதியாக உள்ளனர்.

1.2 தாபனத்தின் கட்டமைப்பு



அத்தியாயம் 02: மூலோபாயச் செயல்திறன்

2.1 தலைவரின் செய்தி

நாட்டின் வளர்ச்சிக்காக விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள முதன்நிலையான ஆராய்ச்சி மற்றும் ஆபிவிருத்தி நிறுவனமான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் (கை.தொ.நி.) 2020ஆம் ஆண்டு அறிக்கைக்கு இந்த செய்தியை அனுப்புவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்

அதன் ஆணையைப் பூர்த்திசெய்து, நிறுவனம் கடந்த அறுபத்தைந்து ஆண்டுகளில் சீராக வளர்ச்சியடைந்து, சோதனைச் சேவைகள், கைத்தொழில் மதிப்பாராய்வு மற்றும் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்கான ஆராய்ச்சி உள்ளிட்ட பல்வேறு விஞ்ஞானத் துறைகளில் இருந்து அதன் திறன்களையும், நிபுணத்துவத்தையும் மற்றும் தகுதிகளையும் தொடர்ந்தும் விரிவுபடுத்தியுள்ளது. 1955இல் இலங்கை விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனமாக (CISIR) நிறுவப்பட்ட இது ஆற்றலைக் கட்டியெழுப்புதல், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனிதசக்தி அபிவிருத்தி மற்றும் நாட்டின் MSME துறையில் தகுதியின் மேம்பாடு ஆகியன உட்பட புத்தாக்க ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, தொழில்நுட்ப அபிவிருத்தி, தொழில்நுட்பச் சேவைகள் மற்றும் நாட்டின் பரந்த அளவிலான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் தேவைகளில் தலையீடு ஆகியவற்றின் மூலம் தேசிய வளர்ச்சிக்கு மிகப்பெரிய பங்களிப்பைச் செய்துள்ளது.

2020 பெப்ரவரியில் நியமிக்கப்பட்ட கை.தொ.நி.இன் தற்போதைய நிர்வாகக் குழு, 2020இன் தொடக்கத்தில் நாட்டில் பரவத் தொடங்கிய உலகளாவிய தொற்றுநோய் சூழ்நிலையின் காரணமாக உருவாக்கப்பட்ட திடீர் கோரிக்கைகளை பூர்த்தி செய்ய அதன் திறன்களை தரமுயர்த்துவதில் பல சவால்களை எதிர்கொண்டது. நாட்டிலுள்ள அதன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் சோதனை நிறுவனங்களில் இருந்து விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உள்ளீடுகள் தேவைப்படும் கொவிட்-19 பரவலைத் தடுப்பதற்கான கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதன் திறநிலையான பணியாளர்களுடன், கொவிட்-19 தொற்றுநோய்க்கான தடுப்பினையும் மற்றும் கைத்தொழில் அம்சங்களையும் ஆதரிப்பதில், அந்தந்த பதிவு அதிகார சபைகளுடன் உயிரகமருத்துவத் தயாரிப்புகளை பதிவு செய்வதற்கு மிகவும் தேவையான பகுப்பாய்வுச் சேவைகளை கைதொ.நி. வழங்கியது. மேலும், GMP மற்றும் WHO வழிகாட்டுதல்களைப் பூர்த்திசெய்து, தரம்-உறுதிப்படுத்தப்பட்ட மதுசாரம் அடிப்படையிலான கை சுத்திகரிப்பானை வழங்குவதற்கு ஒரு கை சுத்திகரிப்பு உற்பத்தி வசதியை கை.தொ.நி. நிறுவியதுடன், அமைச்சரவை வழிகாட்டுதலின்படி, அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் மற்றும் CWE ஆகிய விற்பனை நிலையங்கள் மூலம் பொதுமக்களுக்குக் கிடைக்கச்செய்தது.

புதிய இயல்பான சூழ்நிலைகள், 4ஆவது தொழிற்புரட்சியின் கோரிக்கைகள் மற்றும் சமூக-பொருளாதாரம், தொழில்நுட்பம், சூழல் மற்றும் அரசியல் நிலப்பரப்பின் நிலை மற்றும் உலகளாவிய சந்தைகளின் இயக்கவியல் ஆகியவற்றுடன், உலகளாவியரீதியில் உருவாக்கப்பட்ட புதிய கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்காக தற்போதைய நிருவாகத்திற்கும் மற்றும் தொழிற்பாட்டுக் கட்டமைப்புக்கும் மூலோபாயத்திலான மாற்றங்களைக் கொண்டு வர கை.தொ.நி. முன்மொழிந்தது. இச்சூழலில், கை.தொ.நி.ஐ மதிப்பிடுவதற்கும், அறிவு சார்ந்த பொருளாதாரத்திற்கான தொழில் வளர்ச்சியில் ஏற்படும்

முன்னேற்றங்களின் கோரிக்கைகளை பூர்த்தி செய்வதற்கான பரிந்துரைகளை முன்மொழிவதற்கும் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் முன்மொழிவுக்கு சபை ஒப்புதல் அளித்தது. மேலும், பங்குதாரர்களின் அனைத்து விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் தேவைகளுக்காக கை.தொ.நி.இல் "ஒரே-நிறுத்தக் கடை" நிலையத்தை நிறுவ சில ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய செயல்முறையை சபை மீண்டும் செயல்படுத்தியது. இதன் விளைவாக, கை.தொ.நி. கொழும்பு வளாகத்தில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வணிக நிலையத்தை (Sand TBC) நிறுவுவதற்கு சபை ஒப்புதல் அளித்ததுடன், Sand TBC விவகாரங்களுக்கு உதவுவதற்காக Sand T-அடிப்படையிலான தனியார் துறை நிறுவனங்களின் முன்னணி ஆளணியினரின் மத்தியிலிருந்து ஓர் ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டது.

கை.தொ.நி. தொழில்நுட்பத் திறன்களை வலுப்படுத்துவதில், அதன் மேம்பட்ட பகுப்பாய்வு வசதிகளுடன் பல புதிய உயர்தர உபகரணங்கள் சேர்க்கப்பட்டதுடன், சில புதிய பி.எச்டி.கள் மற்றும் முதுநிலைத் தகுதி பெற்ற விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள் அதன் முக்கியமான பொருண்மைக்குச் சேர்க்கப்பட்டனர். கொவிட்19 தொற்றுநோய்க்கும் மற்றும் தொடர்ச்சியான பூட்டுதல்களுக்கும் மத்தியில், 46.4% செலவின மீட்சியுடன் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருவாய் உருவாக்கம் சற்று குறைந்துள்ளது. மேலும், சேவை வழங்கலில் பாதிப்பை ஏற்படுத்தி, பணியாளர்களுக்கு நோய்த்தொற்று ஏற்படுவதைத் தவிர்க்க மிகக் குறுகிய காலத்திற்குள் அனைத்துப் பணியாளர்களுக்கும் தடுப்பூசி ஏற்றுவது உட்பட தடையில்லா சேவைக்காக வழங்கப்பட்ட மூலோபாயத் தீர்வுகள் மூலம் தேசத்திற்கான தனது சேவையை கை.தொ.நி. உறுதிசெய்தது. தொற்றுநோய் காரணமாக பல முரண்பாடுகளுக்கு மத்தியில், மூலோபாயத் தீர்வுகளைச் செயல்படுத்துவதன் மூலம், நாட்டில் பொருளாதார ஏற்றத்தை உருவாக்க "சுபீட்சத்தின் காட்சிகள்" என்ற தேசிய கொள்கை வரைச்சட்டத்துடன் இணைந்து ஆண்டில் கை.தொ.நி. கணிசமாக முன்னேறியது. எனவே, கை.தொ.நி.ஐ முதன்நிலையான கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனமாகவும் மற்றும் நாட்டில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சோதனை வசதியாகவும் நிலைநிறுத்த உதவிய கைத்தொழிலினதும் மற்றும் பொதுமக்களினதும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்காக நிறுவனத்தின் பணியாளர்களுக்கும் மற்றும் நிர்வாகத்திற்கும் சபையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலாநிதி சிறிமல் பிரேமகுமார PhD
தலைவர்

2.2 பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

65 ஆண்டுகளுக்கும் மேலாக, இலங்கை விஞ்ஞான், கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனத்தின் (CISIR) அடுத்தமைகின்ற கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (கை.தொ.நி.) விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புதுமாற்றங்கள் ஆகியன மூலம் பல சவால்களைத் தீர்த்து வருவதுடன், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, தொழில்நுட்ப கைமாற்றம், உசாவுகை, பயிற்சி மற்றும் சர்வதேச அளவில் போட்டி சோதனை மற்றும் மதிப்பாராய்தல் சேவைகள் ஆகியன மூலம் கைத்தொழில் வளர்ச்சியை ஊக்குகின்றது. உயர்கல்வி, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க அமைச்சின் கீழ் கை.தொ.நி. செயல்பட்டதுடன் (நொவம்பர் 2020 வரை) பின்னர் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் செயல்படுகிறது.

2020 மார்ச் 15 முதல், பூட்டப்பட்டதிலிருந்து கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோய் கை.தொ.நி. உட்பட இலங்கையின் பல களங்களைச் சீர்குலைத்தது. கொவிட்-19இன் காரணமாக, 2020இல் சோதனை மற்றும் மதிப்பாராய்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் சேவைகள், விநியோகச் சங்கிலி மற்றும் ஏற்பாட்டியல்கள் ஆகியவற்றின் முக்கிய பகுதிகள் சீர்குலைந்தன. தொடர்புடைய பூட்டுதல்களுடனும் மற்றும் குறைந்தபட்ச பணியாளர்களுடனும் மட்டுமே வேலை செய்ய முந்தது. இந்தச் சவால்களை அர்ப்பணிப்பு, படைப்பாற்றல் மற்றும் விடாமுயற்சி ஆகியவற்றுடன் கை.தொ.நி. எதிர்கொண்டதுடன், 2020இல் தொற்றுநோய்களின் போது உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு கணிசமானளவு பங்களிப்பையும் வழங்கியது. இலங்கையின் தொழில்நுட்பத் தலைமைக்கும் மற்றும் தொழில்நுட்ப இறையாண்மைக்கும் உத்தரவாதம் அளிக்கும் விதத்தில் எங்கள் பங்கை முழுநிலையாக ஆற்றுவதற்கு, தொற்றுநோயின் போது, உயர்தர நிலைத்தன்மையை கை.தொ.நி. வெளிப்படுத்தியது. அதன் கூட்டு முயற்சிகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தினதும் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மானியமளிக்கும் முகவராண்மைகளினதும் ஆதரவுடன், பிரயோக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சோதனை மற்றும் மதிப்பாராய்தல் சேவைகள் ஆகியவற்றில் ஒரு முன்னணி நிறுவனமாக தனது பங்கைப் பராமரிக்கவும் அத்துடன் ஒருங்கிணைக்கவும் கை.தொ.நி.ஆல் முடிந்தது.

ஒரு செயல் திட்டம், 2020இல் கை.தொ.நி. செயல்பாடுகளின் ஒரு சாராம்சம், திட்டமிடப்பட்ட நோக்கங்களுக்கு எதிரான செயல்திறன் சிறப்பம்சங்கள் மற்றும் விளைவுகள், மாசுபாட்டைக் கண்காணித்தல் மற்றும் தணித்தல், நிதிசார் செயல்திறன் மற்றும் 2020இல் அரசாங்கம், கைத்தொழில்கள், அரசு சாரா அமைப்புக்கள் மற்றும் சனசமூகம் ஆகியவற்றுக்கு தரமான சேவைகளின் வழங்கல் ஆகியன உட்பட மூலோபாயச் செயல்திறனை இந்த ஆண்டு அறிக்கை வழங்குகிறது.

முதலாவதாக, கை.தொ.நி. நிர்வாக சபையிடமிருந்து பெறப்பட்ட விலைமதிப்பற்ற வழிகாட்டுதலகளையும் மற்றும் ஆலோசனைகளையும் நான் பாராட்டுகிறேன். இரண்டாவதாக, ஆழ்ந்த கடப்பாடு, அர்ப்பணிப்பு மற்றும் கூட்டு மனப்பான்மைநிலை ஆகியவற்றுடனும் அத்துடன் விஞ்ஞானத்திலும் மற்றும் நிர்வாகப் பணிகளிலும் பல்-துறை அணுகுமுறையைக் கடைப்பிடித்தும் சிறப்பு ஒப்புரவுகளைப் பொறுப்பேற்ற அதே வேளை, தொழிற்பாட்டிலான தொடர்ச்சியை பேணிய கை.தொ.நி. நிர்வாகக் குழுவுக்கும், கை.தொ.நி. பணியாளர்களுக்கும் மற்றும் சக பணியாளர்களுக்கும் நான் மிகவும் நன்றியுள்ளவராக இருக்கிறேன். அவர்களின் தாராளமான ஆதரவும் மற்றும் ஒத்துழைப்பும் இல்லாவிட்டால், 2020இல் நிலவிய கொவிட்-19 தொற்றுநோயால் ஏற்பட்ட பொருளாதார நிலைமைகளால் ஏற்பட்ட கொந்தளிப்பான காலங்களில் தனது இலக்குகளை கை.தொ.நி.ஆல் அடைய முடிந்திருக்காது.

2020 இல், ஆராய்ச்சியின் மாற்றத்தையும், ஆராய்ச்சி முடிவுகளை வணிகமயமாக்குவதையும் வசதிப்படுத்திய அதே வேளை, அரசு முன்னுரிமைகள், "சுபீட்சத்தின் காட்சிகள்" என்ற தேசிய கொள்கைக் கட்டமைப்பு, கைத்தொழிலின் கிராக்கி ஆகியவற்றுடன் இணைகின்ற துறைகளில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் புதுமாற்றம் ஆகியன மீது நோக்கினைக் கொண்டிருப்பதை நாம் தொடர்ந்தோம். இந்த ஆண்டில், கை.தொ.நி. ஆனது சோதனை மற்றும் மதிப்பாராய்தல், தொழில்நுட்பக் கைமாற்றங்கள், உசாவுகை, ஒப்பந்தக் கருத்திட்டங்கள் மற்றும் பயிற்சி ஆகியன உட்பட 15,000க்கும் மேற்பட்ட சேவைகளைப் பொறுப்பேற்றதுடன், இலங்கைக் கைத்தொழில்கள், சர்வதேசக் கூட்டாண்மைகள் மற்றும் 1,000க்கும் மேற்பட்ட சிறியதிலிருந்து நடுத்தரம் வரையிலான தொழில்முனைவோர் (SMEs) உட்பட 18,000க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுடன் பணியாற்றியது.

தெற்கில் நிலையான வளர்ச்சிக்கான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணையம் (COMSATS), உலக கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைப்பு (WAITRO), சர்வதேச மூங்கில் மற்றும் பிரம்பு அமைப்பு (INBAR), ஐக்கிய நாடுகள் கைத்தொழில் மேம்பாட்டு அமைப்பு (UNIDO), உணவு மற்றும் விவசாய ஐக்கிய நாடுகளின் அமைப்பு (FAO), Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ), சர்வதேச மேம்பாட்டு ஆராய்ச்சி நிலையம் (IDRC), ஐக்கிய நாடுகள் முன்னேற்றத் திட்டம் (UNDP), சீனாவின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு, சர்வதேச இரசாயன மற்றும் உயிரியல் விஞ்ஞானங்கள் நிலையம், கராச்சி பல்கலைக்கழகம், அரை வறண்ட வெப்பமண்டலங்களுக்கான சர்வதேசப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம; (ICRISAT) மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலிடோ பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் கை.தொ.நி. அதன் நீண்ட கால ஒத்துழைப்பு மற்றும் கூட்டுத் திட்டங்களைத் தொடர்ந்தது.

தொழில்நுட்பக் கைமாற்றங்கள்

ஒப்பந்த ங்கள் மூலம் மூன்று முக்கிய தொழில்நுட்ப கைமாற்றங்கள் முடிக்கப்பட்டன. இதில் பின்வருவன அடங்கும் (அ) ஏற்றுமதிச் சந்தைகளை இலக்காகக் கொண்டு, அதன் தனித்துவமான சுவையையும் மற்றும் மருத்துவப் பயனையும் கொண்ட ஒரு மதுசார கித்துல் பானம். ரூ. 20.5 மில்லியனில் இந்த பானத்தின் ஆக்கவுரிமை அக்ரி தேஷியா (பிறை.) லிமிற்.க்குச் சார்ந்ததாகும் என்பதுடன், இது கை.தொ.நி. வரலாற்றில் ஒரு தொழில்நுட்பத்திற்காக பதிவுசெய்யப்பட்ட அதிக நிதி பரிவர்த்தனையாகும். (ஆ) மாற்றியமைக் கப்பட்ட தென்னை நார் அடிப்படையிலான பொருட்கள் மற்றும் எண்ணெய்க் கசிவுகளை அகற்றுவதற்கான அதன் பிரயோகப் பொருட்கள் ஆகியன தப்ரபேன் இன்ரர்நஷனல் லிமிற். க்கு விற்கப்பட்டன (இ) இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு பிரெஞ்சு பொரியல்களுக்கு மாற்றாக உள்நாட்டில் வளர்க்கப்படும் உருளைக்கிழங்கு வகைகளில் இருந்து உறைந்த உருளைக்கிழங்கு பிரெஞ்சு பொரியல்கள், விவசாய அமைச்சின் சிறுதொழில் வியாபாரக் கூட்டுத் திட்டத்தின் (SAPP) உதவியுடன் JGS-கஹத்தவெல லிமிற். க்கு விற்கப்பட்டன.

மேலும், 60க்கும் மேற்பட்ட தொழில்நுட்பங்கள் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கு (MSMEs) புதிய வணிகங்களைத் தொடங்குவதற்கு அல்லது தற்போதைய வணிகங்களை மேம்படுத்துவதற்கு அல்லது விரிவாக்குவதற்கு உதவுவதற்காக கைமாற்றப்பட்டன. கொவிட்-19க்கு எதிரான மூலிகை சார்ந்த பராமரிப்புப் பொருட்கள், குறைந்த விலையில் அடைக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட கோப்பி, சுவையூட்டப்பட்ட பால் பானம், மாம்பழக் கூழ், மாம்பழப் பானங்கள், மாம்பழப் பதப்படுத்திகள், பரிமாறத் தயாராக இருக்கும் பானங்கள், பழ மற்றும் மரக்கறிகள் நீரகற்றல் தொழில்நுட்பங்கள், உறைந்த பழ மற்றும் மரக்கறிப் பதப்படுத்தல் தொழில்நுட்பங்கள், வாசனைத்திரவியப் பதப்படுத்தல் தொழில்நுட்பங்கள், பலா பழம் சார்ந்த உற்பத்திப்பொருட்கள், இறைச்சிப் பதிலீடுகள் மற்றும் பலாக்காய், காளான் மற்றும் தானியங்கள் மற்றும் உயர்தர கிரபெனின் அடிப்படையிலான பொருட்கள், யானை முன் எச்சரிக்கை மற்றும் அலார அமைப்பு, மூலிகை அழகுசாதனப் பொருட்கள், கை சுத்திகரிப்பான், மூலிகைத் தேநீர் மற்றும் வீட்டுப் பராமரிப்பு பொருட்கள் ஆகியனவற்றை SMEகளுக்கு மாற்றப்படும் முக்கிய தொழில்நுட்பங்கள் உள்ளடக்குகின்றன.

மேலதிகமாக, அதன் வலைப்பின்னல் ஊடாக, KASPER உற்பத்தியைச் சந்தைப்படுத்த கித்துல் தீவிரப்படுத்தல் மற்றும் பதனீர் உற்பத்தி மீள்-முகவர் (KASPER) தொழில்நுட்பத்தை APIC அக்ரோ பிரைவேட் லிமிறெற் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) ஆகியவற்றுடன் தொடர உரிம ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. கிராமப்புறக் கைத்தொழில்

மேம்பாடு மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல், குறிப்பாக விதாத நிலையங்கள் மற்றும் விதாத தொழில்முனைவோர் மூலம் நுண் நிறுவனங்களினதும் (MEs) மற்றும் SMEஇனதும் ஈடுபாட்டை உருவாக்குவதற்கும் அத்துடன் மேம்படுத்துவதற்கும் தொழில்நுட்பங்களை வழங்குவதை கை.தொ.நி. தொடர்ந்தது.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் புத்தாக்கம்

சிறந்த ஆராய்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகியன மூலம் தேசத்திற்கு சேவை செய்வதை பாக்கியமாக கருதுகிறோம். முன்னணி தேசிய அரசாங்கத்திற்குச் சொந்தமான, மிகப்பெரிய விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமாக, கை.தொ.நி. ஆனது, இலங்கையிலும் மற்றும் உலகளாவிலும் உள்ள அரசாங்கம், ஆராய்ச்சி வலையமைப்பு, கைத்தொழில் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றும் முழு நாட்டிற்கும் தொழில்நுட்ப புத்தாக்கங்களை வழங்குவதற்கான எங்கள் முக்கிய நோக்கத்தை தொடர்ந்து வழங்குகிறது. 2020இல், இருபது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொழில் மற்றும் நுகர்வோர் தேவையின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், இந்தக் கருத்திட்டங்கள் உணவு, சுகாதாரம், உயிரகத்தொழில்நுட்பம், பொருட்கள், சூழல், இயற்கை வளங்கள், அளவியல், மின்தொழில்நுட்பம் மற்றும் எதிர்காலக் கைத்தொழில்கள் ஆகிய துறைகளில் இருந்தன. வணிகமயமாக்கலுக்காக இந்தக் கருத்திட்டங்கள் மூலம் பல தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டன. அவ்வாறாக, தொழில்நுட்பச் சிக்கல்களை கை.தொ.நி. வெற்றிகரமாகத் தீர்ப்பதுடன், கைத்தொழிலுக்கும் மற்றும் சமூகத்திற்கும் தீர்வுகளையும் வழங்கியது.

இந்த ஆண்டு முழுவதும் கொவிட்-19ஐ எதிர்த்துப் போராடுவதற்கான ஆராய்ச்சியையும் மற்றும் அபிவிருத்தியையும் கை.தொ.நி. நடத்தியது. திரவ மற்றும் கூழ் கை சுத்திகரிப்பான்கள், மூலிகை வாய்கழுவி, சுத்திகரிப்பான் டிஸ்பென்சரின் வடிவமைப்பு மற்றும் புனைவு, கொவிட்-19 ஊசிகளைக் கண்டறிவதற்கான விரைவான கண்டறியும் கருவி, ஒரு மூடுபனி சுரங்கப்பாதை மற்றும் O_3 மின்பிறப்பாக்கி ஆகியவை உருவாக்கப்பட்ட முக்கிய தயாரிப்புகளில் அடங்குகின்றன. கொவிட்-19 தொற்றுநோய் காலத்தின் போது அதன் ஆராய்ச்சியினதும் மற்றும் முன்னேற்றத்தினதும் மூலம், மூலிகை அடிப்படையிலான தெளிப்பு முகவர் மற்றும் மூச்சிழுப்புக் கருவி, காவக்கூடிய மூலிகை நீராவி, ஆயுர்வேத எண்ணெய், உடல் கழுவுநீர்மங்கள், கை சுத்திகரிப்பு விசிறல் மற்றும் வளி விசிறல், வீட்டுப்பாராமரிப்பு பாக்டீரியா எதிர்ப்பு மேற்பரப்பு சுத்திகரிப்புக் கூழ், கை கழுவி மற்றும் நுரை கழுவி, சுத்திகரிக்கும் புகைபிடிக்கும் உற்பத்திப்பொருட்கள், தேங்காய் எண்ணெய் எஸ்தர்-அடிப்படையிலான நுண்ணுயிர் எதிர்ப்பு மேற்பரப்பு கிருமி நீக்கம் செய்யும் முகவர், பழங்களுக்கும், மரக்கறிக்கும் உயிரக நுரை நீர்த்தடம், உயிரக நுரை நீர்த்த மேற்பரப்பு தொற்றுநீக்கி, உடல் கழுவுநீர், உயிரக ஈர துடைப்பான்கள், உயிர G ஒளிபுகு சவர்க்காரம் மற்றும் விதையுறை, மாத்திரைகள், மூலிகைத் தேநீர், மூலிகை ஷொட், பாகு, லொஸிஞ்சர் போன்ற தொற்றுநீக்கி ஊக்கிகள்/மேம்படுத்திகள் மற்றும் பஸ்பங்குவா, குதிரைவாலி உற்பத்திப்பொருட்கள், மூலிகைக் கஞ்சி, சுண்ணாம்பு சமபிரசாரணமுள்ள சக்தி ஊக்கி மற்றும் மிளகு, கொத்தமல்லி, மஞ்சள் மற்றும் இஞ்சி அடிப்படையிலான உற்பத்திப்பொருட்கள், ஆகியவற்றை கை.தொ.நி. உருவாக்கியுள்ளது.

உள்நாட்டுக் காரீயத்தில் இருந்து மசகு எண்ணெய் தயாரிப்புகள், மின்-இரசாயன பிரயோகங்களுக்கான காரீயம் அடிப்படையிலான கலவை மின்முனை, கிராபெனின் உற்பத்தி செயல்முறைக்கான கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறி, குறைந்த விலை உயிரக-சிதைவு பிளாஸ்டிக் படம், உயர் துல்லியத்திலான 4 அலைவரிசை wi-fi வெப்பமானி மற்றும் கழிவு மோரில்

இருந்து செயல்படும் பானம் ஆகியனவற்றை வணிகமயமாக்கலுக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றின் மூலம் உருவாக்கப்பட்ட ஏனைய முக்கிய தொழில்நுட்பங்கள் உள்ளடக்குகின்றன.

தொழில்நுட்பச் சேவைகள்

கை.தொ.நி.இன் சோதனைச் சேவைகளின் அனுபவங்களையும் மற்றும் வெற்றிகளையும் தொடர்ந்து, 2020இல், கை.தொ.நி.இன் ஆழமான ஆட்சிப்பரப்பிலான நிபுணத்துவம் முழுவதும் உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கும் மற்றும் அரசு நிறுவனங்களுக்கும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற இந்த சேவைகளைத் தொடர்ந்து வழங்கினோம. இரசாயனம், நீர், கழிவுநீர், உணவு, விவசாயப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், மருந்துகள், பூச்சிக்கொல்லிகள், மதுசாரங்கள், பொருட்கள், உராய்வுநீக்கிகள் மற்றும் பெற்றோலியம் எண்ணெய், நுண்ணுயிரியல், பொதிப்படுத்தல் மற்றும் மூலிகை மருந்துகள், வாசனைத்திரவியங்கள் மற்றும் அத்தியாவசிய எண்ணெய், உயிரகத்தொழில்நுட்பம், சூழல் மாசுபாடு மற்றும் தணிப்பு, பூச்சிக்கொல்லி எச்சங்கள், கன உலோகங்கள் மற்றும் மைக்கோடாக்சின்கள் ஆகியவற்றின் தடய அளவு மற்றும் தேசிய அளவியல் உள்கட்டமைப்பு போன்ற துறைகளில் இந்தச் சோதனை சேவைகள் விளங்கின.

நடமாடும் ஆய்வகம், காற்று மாசு கட்டுப்பாடு மற்றும் தணிப்பு, கழிவு நீர் சுத்திகரிப்பு, திடக்கழிவு முகாமைத்துவம், நீர் தர ஆய்வுகள், அபாயகரமான கழிவு முகாமைத்துவம் மற்றும் சூழல் போன்ற சுற்றுப்புற காற்றின் தரம் மற்றும் அடுக்கு உமிழ்வு கண்காணிப்பு உட்பட சூழல் தொழில்நுட்பத்தின் பல்வேறு துறைகளில் 500க்கும் மேற்பட்ட சேவைகளை கை.தொ.நி. நடத்தியது. 2020இல் தாக்க மதிப்பீடுகள் நாட்டில் மின் மற்றும் சக்தி, வீதி, நெடுஞ்சாலைகள், ரயில், கைத்தொழில் மற்றும் கப்பல் துறைகள் ஆகியவற்றுக்கு அளவீடுகள், தணிப்பு, கணிப்பு மற்றும் ஒலி மாதிரிப்படுத்தல் சேவைகள் உள்ளிட்ட இரைச்சல் மற்றும் அதிர்வு மதிப்பீட்டு ஆய்வுகள் வழங்கப்பட்டன.

மதிப்பாய்வு ஆண்டில், கை சுத்திகரிப்பான்கள், முகமூடிகள், தனிமைப்படுத்தும் உறையங்கள், தொற்றுநீக்கிகள், அழுகலெதிரிகள், கிருமியழிகருவிகள், தூமமாக்கிகள், குடித்தனத்தையும் மற்றும் மருத்துவமனையையும் சுத்தம் செய்யும் உற்பத்திப்பொருட்கள், ஆயுர்வேத மற்றும் மூலிகை உற்பத்திப்பொருட்கள், மற்றும் நீர்ப்பீடன/ஆற்றலை அதிகரிக்கும் உணவு ஆகியன உட்பட உள்நாட்டுத் தொழிலுக்கும் மற்றும் ஏற்றுமதித் தொழில்களுக்கும் உதவுவதற்கும், கொவிட்-19 தொடர்பான தயாரிப்புச் சோதனைகளை ஆதரிப்பதற்கும் கை.தொ.நி.இன் நோக்கெல்லையை விரிவுபடுத்துவதற்காக புதிய சோதனைச் சேவைகள் நிறுவப்பட்டன.

தர உட்கட்டமைப்பு

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு மற்றும் தகவல் சேவை நிலையம் ஆகியவற்றுக்கான ISO 9001:2015 தர கைத்தொழில் அமைப்பு சான்றிதழுடன் நிறுவனம் தொடர்ந்தது. கை.தொ.நி.இன் தற்போதைய ஆய்வக தர முகாமைத்துவ அமைப்பான ISO/IEC 17025:2017 தொழில்நுட்ப சேவைகள் பிரிவுக்காக பராமரிக்கப்பட்டதுடன், 675க்கும் மேற்பட்ட சோதனை அளவுருக்கள் இரசாயன, உணவு மற்றும் நீர், கழிவு நீர், அழகுசாதனப் பொருட்கள், பொருட்கள், (சிமெந்து, இறப்பர் மற்றும் மட்பாண்டங்கள்), நுண்ணுயிரியல் அளவுருக்கள், இரசாயன எச்சங்கள், உலோக எச்சங்கள் மற்றும் கைத்தொழில் இரைச்சல் மற்றும் அதிர்வு அளவீடுகள் ஆகியன இலங்கை அங்கீகார சபையினால் (SLAB) அங்கீகரிக்கப்பட்டுள்ளன. கொரிய தரநிலைகள் மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனம் (KRISS), ஜேர்மனி

Physepiyalisch-Technische Bundesanstalt (PTB), மற்றும் தாய்லாந்து தேசிய அளவையியல் நிறுவனம் ஆகியன ஊடாக, SI அலகுகளுக்கு திரள், பரிமாணங்கள், தொகை, மின், விசை, அழுத்தம் மற்றும் வெப்பநிலை அளவீடுகள் மற்றும் அளவீட்டுத் தடமறிதல் ஆகியவற்றுக்காக ISO/IEC17025:2017 ஆய்வக தரமுகாமைத்துவ அமைப்பை கைத்தொழில் அளவையியல் ஆய்வகம் தொடர்ந்தது

SLABஆல் ISO/IEC 17043:2010 தகுதித் தேர்வுக்கான அங்கீகாரம் (PT) கை.தொ.நி.க்கு வழங்கப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் கை.தொ.நி. 1ஆவது இலங்கை அங்கீகாரம் பெற்ற PT வழங்குநராக மாறியுள்ளது. நீர் நுண்ணுயிரியல், உணவு நுண்ணுயிரியல் மற்றும் சிமெந்து ஆகியவற்றுக்கான இரசாயன மற்றும் பௌதீக சோதனை ஆகியவற்றில் PT நிகழ்ச்சிகளை கை.தொ.நி. நடத்துகிறது. இது தேசிய தர உட்கட்டமைப்பில் மிகவும் முக்கியமான அங்கமாகும். UNIDO உதவியுடன் புதிதாக நிறுவப்பட்ட பொதிப்படுத்தல் சோதனை ஆய்வகத்திற்கு அங்கீகார நிலை பயன்படுத்தப்பட்டது.

உட்கட்டமைப்பு அபிவிருத்தி

கை.தொ.நி.இல் சோதனை உபகரணங்கள் உட்பட தேவையான உள்கட்டமைப்புக்காக அரசாங்க நிதியின் கீழ் பெற்றோலியம் மற்றும் உராய்வுநீக்கி சோதனை ஆய்வகம் நிறுவப்பட்டது. அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மேம்பட்ட மருந்து அளவுருக்களுக்கான சோதனை உட்பட மருந்தியல் தயாரிப்புகளைச் சோதிக்க தேசிய மருந்தியல் சோதனை ஆய்வகம் கை.தொ.நி.இல் நிறுவப்பட்டது. உயிரகத்தொழில்நுட்பப் பிரிவில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சூழல் அமைச்சின் ஊடாக FAOஇன் உதவியுடன் வாழும் நுண்ணுயிரிகளுக்கான மேற்கோள் மற்றும் பரிசோதனை ஆய்வகத்தை நிறுவ கை.தொ.நி. ஆரம்பித்தது. கை.தொ.நி.இல் உயிரகத்தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் சோதனைச் சேவைகளுக்கான அங்கீகாரத்தைப் பெற, உயிரகத்தொழில்நுட்ப அலகு உயிரகத்தொழில்நுட்பப் பிரிவாக மேம்படுத்தப்பட்டது.

கடலில் சேரும் பிளாஸ்டிக்கை நிவர்த்தி செய்யவும், கடல் குப்பைகளைக் குறைக்கவும் பொதுநலவரசு குப்பைத் திட்டத்தில் (CLiP) நுண்பிளாஸ்டிக் சோதனை ஆய்வகத்தை நிறுவுவதற்கான உபகரண மானியத்தை ஐக்கிய இராச்சிய (UK) அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட ஒரு மானியத் திட்டமாக UK சூழல், மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு விஞ்ஞான நிலையம் (Cefas) மூலம் கை.தொ.நி. பெற்றது. மேலும், இந்த CLiP கருத்திட்டத்தின் ஒரு பகுதியாக, கை.தொ.நி.இன் கணனி அலகில் குப்பை சேகரிப்புத் தரவைச் சேமிப்பதற்கான ஒன்லைன் தரவுத்தள அமைப்பை உருவாக்குவதற்கான மானியத்தையும் கை.தொ.நி. பெற்றது.

சீனாவின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு (MOST), இலங்கையின் உயர்கல்வி ஆராய்ச்சி அமைச்சு மற்றும் யுன்னான் கிராமிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பச் சேவை நிலையம் மற்றும் சீனாவின் குன்மிங்கில் உள்ள யுனான் விவசாயப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் கைச்சாத்திடப்பட்ட கட்டமைப்பு ஒப்பந்தத்தின் கீழ், சிறப்புத் தாவர வளங்கள், தேயிலை, கறுவா மற்றும் முருங்கை மற்றும் அவற்றின் கைத்தொழில் பயன்பாடுகள் ஆகியன பற்றிய ஆராய்ச்சியையும் மற்றும் அபிவிருத்தியையும் மேற்கொள்வதற்காக சீன-இலங்கை உயிரகதொழில்நுட்ப கூட்டு ஆய்வகத்திற்கு 600,000 அமெரிக்க டொலர் மதிப்பிலான உபகரணங்களை கை.தொ.நி. பெற்றுக்கொண்டது. உயிரகத்தொழில்நுட்பம் மீதான சீன-இலங்கை கூட்டு ஆய்வகத்தின் பணிகளை கை.தொ.நி. முடிக்கத் தொடங்கியது.

உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு ஒரு குவியப் புள்ளியாகச் செயல்படவும் மற்றும் வலைப்பின்னலமைப்பு மீது போட்டிக்குரிய அனுகூலங்களைப் பெறவும் கைத்தொழில்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் முதலீட்டாளர்கள் உள்ளிட்ட பங்குதாரர்களுக்கு S and T-அடிப்படையிலான சேவைகளை வழங்கவும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப (S and T) வணிக நிலையம் 2020இல் நிறுவப்பட்டது.

2020இல், கொவிட்-19 தொற்றுநோய்களின் போது மாலபே நவீன ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வளாகத்தில் (MRDC) ஒரு முன்னோடி அளவிலான உற்பத்தி வசதி நிறுவப்பட்டதுடன், தொற்றுநோயைத் தோற்கடிப்பதற்கான ஒரு முயற்சியாக, கை சுத்திகரிப்பான்கள் தயாரிக்கப்பட்டு, இலங்கை அரச கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா சதொச விற்பனை நிலையங்கள் ஆகியன மூலம் விநியோகிக்கப்பட்டன.

2020இல், கொவிட்-19 தொற்றுநோயின் தொடக்கத்துடன், பூட்டுதல் மற்றும் வீடடிலிருந்து பணியாற்றுதல் காலங்களின் போது, கை.தொ.நி. பணியாளர்களுக்கு நெகிழ்வான, பங்கேற்பு பணிச்சூழலை உருவாக்க, நிறுவகத்தின் IT உள்கட்டமைப்பு பலப்படுத்தப்பட்டது. கணினி வலையமைப்பைப் பாதுகாப்பதற்கும் அத்துடன் நிர்வகிப்பதற்கும் மாலபே வளாகத்தில் ஒரு ∴பயர்வோல் நிறுவப்பட்டதுடன், கை.தொ.நி. பணியாளர்கள் VPN மூலம் நேரடியாக உள்ளக வளங்களை அணுக முடிந்தது. LEARN Identity Access Federationஇன் உறுப்பினராக, கை.தொ.நி.ஆனது 2020இல் Zoom மற்றும் webinar வசதிகளைப் பெற முடிந்தது. கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நடத்துவதில் பணியாளர்களுக்கு உதவுவதற்காக, Zoom காணொளி உரையாடல் வசதி தொடங்கப்பட்டது. சோதனை அறிக்கைகளையும் மற்றும் ஏனைய ஆராய்ச்சி ஆவணங்களையும் சேமிப்பதற்கு வசதியாக கை.தொ.நி. Cloud தொடங்கப்பட்டது.

விருதுகள், ஆக்கவுரிமைகள் மற்றும் அங்கீகாரங்கள்

இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஜனாதிபதி விருது வழங்கும் விழாவில் கை.தொ.நி. விஞ்ஞானிகள், இயற்கை விவசாயப் பூச்சிக் கட்டுப்பாட்டு முகவர் (NAPCA) மேம்பாட்டிற்காக விவசாயத்தின் தொழில்நுட்பத் துறையின் கீழ் திறந்த பிரிவில் இரண்டு தங்கப் பதக்கங்களை வெற்றியிட்டியதுடன், உடனடி அரிசி தயாரிப்பான "Ezy" மேம்பாட்டிற்காக உணவுத் தொழில்நுட்பத்தின் துறையின் கீழ் வணிகமயமாக்கப்பட்ட பிரிவில் வென்றனர். ஒரு இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்க (SLAAS) GRC முதுகலை ஆராய்ச்சி விருதும் மற்றும் இரண்டு SLASS GRC முதுகலை தகுதி விருதுகளும் கை.தொ.நி. விஞ்ஞானிகளுக்கு அவர்களின் PhD ஆராய்ச்சிப் பணிக்காக பெறப்பட்டன.

2020இல், 48 ஆய்வுக் கட்டுரைகள் நடுவர் இதழ்களில் வெளியிடப்பட்டன, 24 சாராம்சங்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச கருத்தரங்கு நடவடிக்கைகளில் வெளியிடப்பட்டன மற்றும் 5 புத்தக அத்தியாயங்கள் சர்வதேச வெளியீட்டாளர்களுக்காக எழுதப்பட்டன. மேலதிகமாக, வருடத்தில் 5 உள்நாட்டுக் காப்புரிமைகளுக்கான விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டபோது 2 காப்புரிமைகள் பெறப்பட்டன.

மனித வள அபிவிருத்தி

ஆராய்ச்சி விஞ்ஞானிகள் மற்றும் பொறியியலாளர்கள், ஆராய்ச்சி தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் சிரேஷ்ட சட்ட அலுவலர், சிரேஷ்ட வாடிக்கையாளர் தொடர்பு அலுவலர் மற்றும்

முகாமைத்துவ உதவியாளர்கள் உட்பட முப்பத்தெட்டு பணியாளர்கள் 2020இல் பணிக்கமர்த்தப்பட்டனர். மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், நான்கு ஆராய்ச்சி விஞ்ஞானிகள் மற்றும் ஒரு ஆராய்ச்சி தொழில்நுட்ப வல்லுனர் தங்கள் PhDஐப் பெற்றனர், அதே நேரத்தில் இரண்டு விஞ்ஞானிகள் இரசாயனவியலிலும் மற்றும் செயல்முறைப் பொறியியலிலும் முதுகலைப் பட்டத்தைப் பெற்றனர்.

நிதிசார் செயற்திறன்

2020ல் ரூ.105 மில்லியன் கொண்ட மூலதன மானியம் மற்றும் ரூ.125 மில்லியன் கொண்ட ஒதுக்கீடு ஆகியன பெறப்பட்டன. இந்த நிதியானது புதிய தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் சோதனை மற்றும் மதிப்பாராய்தல் சேவைகள் மூலம் அதிக வருமானம் ஈட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்பச் சேவைகளுக்கான உயர்தர உபகரணங்களை வாங்க பயன்படுத்தப்பட்டது. ஆண்டின் போது, ரூ.125 மில்லியனில் ரூ.105 மில்லியனைப் பயன்படுத்தி கொள்வனவு செயல்முறையை முடித்ததன் மூலம், அதன் நிதி முன்னேற்றத்தை 84%ஆக பதிவு செய்ய கை.தொ.நி.ஆல் முடிந்தது. கை.தொ.நி. ஆனது 2020இல் ரூ. 270 மில்லியனைப் பெற்றுள்ளது. 2020இல் நிறுவனத்தின் பணியாளர்களின் ஊதியமாகவும் மற்றும் தொடர்ச்சியான செலவுகளை ஈடுசெய்வதற்காக மீளவரும் மானியமாகவும் ரூ. 270 மில்லியன் பெறப்பட்டது.

கொவிட்-19 பூட்டுதல்களினதும் மற்றும் வருடத்தில் குறைந்தபட்ச பணியாளர்களுடன் பணிபுரிந்ததன் காரணத்தினாலும், 2019இல் ரூ.335 மில்லியனாக விளங்கிய நிறுவனத்தின் வருமானம் 2020ல் ரூ.285 மில்லியனாகக் குறைந்துள்ளது. அதே வேளை, அதே காலத்தில் மீளவரும் செலவினம் ரூ.589 மில்லியனிலிருந்து ரூ.553 மில்லியனாகக் குறைந்துள்ளது. வருமானம்/மீளவரும் செலவு விகிதம் 51.4%இலிருந்து 46.4%ஆக சிறிது குறைந்துள்ளது. நிறுவனம் தனது வருமானத்தில் அதிக சதவீதத்தை சோதனை மற்றும் மதிப்பாராய்தல் சேவைகள் மூலம் உருவாக்கியதுடன், இது உருவாக்கப்பட்ட வருவாயில் 63%க்கு (ரூ 164 மில்.) பங்களித்தது. அதே வேளை, தொழில்நுட்பக் கைமாற்றம், தொழில்நுட்பப் பயிற்சி, உசாவுகை மற்றும் ஒப்பந்தக் கருத்திட்டங்கள் ஆகியன உள்ளிட்ட பயிற்சித் திட்டங்கள் மூலம் வருமானம் 37%ஆக இருந்தது. தொழில்நுட்பக் கைமாற்றங்களின் வருமானம் 2019இல் ரூ 7.5 மில்லியனில் இருந்து, 2020இல் ரூ. 11.5 மில்லியனாக அதிகரித்துள்ளது. இருப்பினும், கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக ஒப்பந்தக் கருத்திட்டம் மற்றும் பயிற்சி வருமானம் ஆகியன குறைந்துள்ளன. தொற்றுநோய் பூட்டுதலின் போது ஒரு நெகிழ்ச்சியான உத்தியாக, அரசாங்கத்திடம் இருந்து தேவையான ஒப்புதல்களுடன் கை சுத்திகரிப்பான்களின் உற்பத்தியை கை.தொ.நி. தொடங்கியதுடன், 2020இல் மொத்த வருமானத்திற்கு ரூ. 28 மில்லியனைப் பங்களித்தது. இந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த வருமான இலக்கை நிறுவனம் அடைந்ததினால், செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத்தொகைகள் தொடர்ந்தும் 17ஆவது ஆண்டாக பணியாளர்களுக்கு வழங்கப்பட்டன.

நாம் விருத்தியடைந்து, மாறிவரும் சூழலுக்கு ஏற்றவாறு மாற்றமடைந்து வருவதால், எதிர்காலத்தில் கை.தொ.நி. நிலைத்து நிற்கும் என்று நான் நம்புகிறேன். குறிப்பாக எதிர்காலத்தில் கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோய் காரணமாக, இலங்கையின் பொருளாதார மீட்சியை வடிவமைப்பதிலும் அத்துடன் வழிநடத்துவதிலும் கை.தொ.நி.க்கு அதிக ஈடுபாடுள்ள பங்கை நான் எதிர்பார்க்கிறேன். இந்த வருடாந்த அறிக்கையானது, இலங்கையிலுள்ள அனைத்து பிரஜைகளுக்கும் சிறந்த எதிர்காலத்திற்காக அதன் நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்கும் மற்றும் இலக்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் சோதனைச் சேவைகளை வழங்குவதற்கும் மாறிவரும் சூழலினதும் மற்றும் கைத்தொழிலினதும்

தேவைக்கு ஏற்றவாறு மாற்றியமைத்து பதிலளிப்பதில் கை.தொ.நி.ஆல் ஆரம்பிக்கப்பட்ட முன்முயற்சிகளைக் காட்சிப்படுத்தியது.

அங்கீகாரம்

தலைவர் மற்றும் நிர்வாகச் சபை, நிர்வாகக் குழு, பணியாளர்கள், நேரடி அமைச்சு, வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் நன்கொடை வழங்கும் முகவர்.

கலாநிதி ஜே.கே.ஆர்.ஆர். சமரசேகர

பணிப்பாளர் நாயகம்/பிரதம நிறைவேற்று அலுவலர், கை.தொ.நி.

2.3 செயல் திட்டம்

இல.	'செழிப்பு மற்றும் சிறப்பின் காட்சிகள்' என்ற தேசிய கொள்கை கட்டமைப்பிற்கு தொடர்பான கருத்திட்டத்தின்/ செயல்பாட்டின் பெயர்	கருத்திட்டத்தின் சுருக்கமான விளக்கம்	முன்னேற்றம்
01	**அத்தியாயம் 04: ஓர் உற்பத்தித்திறனான குடிமகன் மற்றும் ஒரு மகிழ்ச்சியான குடும்பம்** **துணைத் துறை: தொழில்முன்னிலைப் பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு** 1.1 அவர்களின் கல்வித் திறனைப் பொருட்படுத்தாமல் தேவைப்படும் மாணவர்களுக்கு தொழில்முன்னிலை மற்றும் தொழில்நுட்ப வாய்ப்புகளை வழங்குதல் **கை.தொ.நி. செயல்பாடு: ஆய்வக உதவிக்காக NVQ 4 பயிற்சிநெறியை நடத்துதல்** **துணைத் துறை: உயர் கல்வி** **கை.தொ.நி. செயல்பாடு: இளங்கலை/முதுகலைப் பட்டம் வழங்குவதற்கான தகுதிக்காக கை.தொ.நி. உடன் இணைந்த தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை நிறுவுதல்**	• இலங்கையில் முதல் தடவையாக ஆய்வக உதவிக்காக NVQ 4 பயிற்சிநெறி (6 மாதங்கள்) அறிமுகப்படுத்தப்பட்டது. • NVQ 5 நிலைக்கு NVQ 4 பயிற்சிநெறி மேம்படுத்தப்பட்டது. • கை.தொ.நி.-இணைந்த தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டது.	• NVQ 4 பதிவுசெய்யப்பட்ட 20 மாணவர்களின் முதல் தொகுதியினரும் மற்றும் கை.தொ.நி. பணியாளர்களும் கோட்பாடு/செயன்முறை அமர்வுகளை நடத்தினர். • NVQ4ஐ NVQ 5 நிலைக்கு மேம்படுத்துமாறு NAITAவிடம் கை.தொ.நி கோரியதுடன், புதிய பயிற்சிநெறிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் நோக்கத்தை விரிவுபடுத்துவதற்கான பணி நடைபெற்று வருகின்றது. • அவசிப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகள் அடையாளங்காணப்பட்டதுடன், மூலதன வரவு செலவுக் கருத்திட்டத்தின் மூலம் வரவு செலவு ஒதுக்கீடுகள் கோரப்பட்டன. • நேரடி அமைச்சிடம் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.
	1.2 தற்போதுள்ள பணியாளர்கள் தங்கள் திறன்களை மேம்படுத்த ஒரு பரந்த வாய்ப்பை வழங்குதல் **கை.தொ.நி. செயல்பாடு: உணவுத் தொழில்நுட்பம், மூலிகைத் தொழில்நுட்பம், பொருட்கள் தொழில்நுட்பம் மற்றும் உயிரகதொழில்நுட்பம் ஆகிய துறைகளில் பயிற்சிக் கருத்திட்டங்கள் மற்றும் குழு தொழில்நுட்ப கைமாற்ற நடவடிக்கைகளை நடத்துதல்**	• உற்பத்தியின் பதப்படுத்தல், பொதிப்படுத்தல் பொருளினதும் மற்றும் இயந்திரங்களினதும் தேர்வு, சுட்டித்துண்டிடுதல் மற்றும் தர உத்தரவாதம் போன்றவற்றைப் பற்றிய அறிவை வழங்குவதற்காக தொழில்முனைவோர் மேம்பாட்டிற்காக பல்வேறு துறைகளில் பயிற்சிக் கருத்திட்டங்களை கை.தொ.நி. நடத்தியது. • பங்குதாரர்களிடையே கை.தொ.நி. செயல்பாடுகளை பிரபலப்படுத்த சுமார் 25 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் வரவழைக்கப்பட்ட விளக்கக்காட்சிகள் மற்றும்	• உணவு தொழில்நுட்பம், மூலிகை, தொழில்நுட்பம், பொருட்கள் தொழில்நுட்பம் மற்றும் உயிரகத் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் 275க்கும் மேற்பட்ட தொழில்நுட்பப் பயிற்சிகள் நடத்தப்பட்டன. • தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் கைமாற்றம், பழங்களினதும் மற்றும் மரக்கறிகளினதும் நீரகற்றல், கற்றாளை RTS, பூசணி மாவு, கித்துல் வைன், உள்நாட்டில் வளர்க்கப்படும் உருளைக்கிழங்கில் இருந்து உறைந்த உருளைக்கிழங்கு பொரியல், மூலிகை சார்ந்த அழகுசாதனப் பொருட்கள் மற்றும் ஒளடதங்கள், கிரபேன் தொழில்நுட்பம், வீட்டுப் பராமரிப்பு உற்பத்திகள், கை சுத்திகரிப்பான்கள், யானை முன் எச்சரிக்கை

		வெப்பினார்கள் நடத்தப்பட்டன (அறுவடைக்குப் பிந்தியமுகாமைத்துவம், மதிப்பு கூட்டப்பட்ட விவசாயத் தொழில்நுட்பங்கள், மூலிகை தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பப் பகுப்பாய்வு). • விஞ்ஞான கண்காட்சிகள் நடத்தப்பட்டன/பங்களிக்கப்பட்டது மற்றும் கைத்தொழில்களுக்கும் பொதுமக்களுக்கும் கை.தொ.நி. தொழில்நுட்பங்களும் மற்றும் சேவைகளும் பிரபலப்படுத்தப்பட்டன. • சம்பந்தப்பட்ட, புதிதாக நிறுவப்பட்ட அமைச்சுகளுக்கு (கிராமியக் கைத்தொழில்கள், மீன்பிடி, விவசாயம், டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு போன்றவை) கை.தொ.நி. செயல்பாடுகள் மற்றும் சேவைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. • உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டங்களில் நிபுணத்துவம் வாய்ந்த வளவாளர்களை வழங்குவதன் மூலமும், கை.தொ.நி. நடவடிக்கைகளை பிரபலப்படுத்துவதன் மூலமும் 12க்கும் மேற்பட்ட வெபினார்களில் தீவிரமாக பங்குபற்றியது.	அமைப்பு போன்றவை உட்பட மேற்கூறிய துறைகளுடன் தொடர்புடைய 45க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப கைமாற்றங்கள் மற்றும் 75 ஒப்பந்தக் கருத்திட்டங்கள் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. • மஞ்சள் பதப்படுத்தல், அறுவடைக்குப் பிந்திய இழப்பைக் குறைத்தல் மற்றும் விவசாயப் பயிர்களுக்கு மதிப்புக் கூட்டுதல், கொவிட்-19 தொற்றுநோயை தணிப்பதற்கான உற்பத்திப்பொருட்கள், இறக்குமதி பதிலீடு, ஏற்றுமதி மேம்பாடு, தேங்காய் எண்ணெயின் தரப் பராமரிப்பு, நச்சு இல்லாத உணவுப் பொருள் தொழில்நுட்பம் போன்ற தற்போதைய சிக்கல்கள் மற்றும் அரசின் முன்னுரிமைத் துறைகளே தொழில்நுட்ப மேம்பாட்டுக்காகவும் மற்றும் கைமாற்றத்திற்காகவும் முக்கியமாக கவனத்திற்கெடுக்கப்பட்டது. • வாடிக்கையாளர் கோரிக்கைகளின் அடிப்படையில் 20,000க்கும் மேற்பட்ட உணவு மற்றும் உணவு அல்லாத உற்பத்திப்பொருள் பகுப்பாய்வு சோதனை சேவைகளை நடத்தியது. • கை.தொ.நி. தொழில்நுட்பங்கள் மற்றும் சேவைகளைக் காட்சிப்படுத்துவதற்காக INNOVOTECH கண்காட்சியிலும் மற்றும் மூன்று முதலீட்டாளர் அரங்குகளில் பங்கெடுக்கப்பட்டது. • மதிப்பு கூட்டப்பட்ட உணவுத் தொழில்நுட்பங்கள், மூலிகைத் தொழில்நுட்பங்கள், பொருள் தொழில்நுட்பங்கள், யானை முன்னெச்சரிக்கை அமைப்புத் தொழில்நுட்பம் ஆகியன மீது தொடர்பான புதிய அமைச்சுக்களை அறியச்செய்வதற்காக நான்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மீனவ சனசமூகத்திற்கான தொழில்நுட்ப கைமாற்ற பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்த மீன்பிடி அமைச்சுடன் பேச்சுவார்த்தையை கை.தொ.நி. நடத்தியது. • உத்தேசமான தொழில்நுட்ப கைமாற்றங்களுக்காக ஏற்கனவே கிராமிய கைத்தொழில்கள், பித்தளை மற்றும் பிரம்பு அமைச்சு மற்றும் இளைஞர் அமைச்சு ஆகியவற்றுக்கு கை.தொ.நி. ஏலவே முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளது. • ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB), அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA), விவசாயத் திணைக்களம் (DoA), உணவு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (IFTSL) ஆகியவற்றுடனான கூட்டுமுயற்சியுடன் பத்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
02	**அத்தியாயம் 04: ஒரு உற்பத்தித்திறன் குடிமகன் மற்றும் ஒரு மகிழ்ச்சியான குடும்பம்** **துணைத் துறை: மேற்கத்திய மருத்துவம்** நச்சு இல்லாத ஆரோக்கியமான உணவுகளைப் பிரபலப்படுத்துதல் **கை.தொ.நி. செயல்பாடுகள்: 2.1 ஆரோக்கியமான உணவு முன்னேற்றத்தையும் மற்றும் தொழில்நுட்ப**	• ஆரோக்கியமான உணவின் முன்னேற்றம் மீது பத்து ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றக் கருத்திட்டங்கள் நடத்தப்படுகின்றன, உதாரணம்: பாரம்பரிய அரிசியின் ஊட்டச்சத்து மற்றும் செயல்பாட்டுப் பண்புகள், தேங்காய் எண்ணெய் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட ஆரோக்கியமான உணவின் சரிபார்ப்பு, தேயிலையின் முன்னேற்றம் மற்றும் தர மேம்பாடு,	• இளம் பலாப்பழம், காளான் மற்றும் தானியங்கள் ஆகியவற்றிலிருந்து இறைச்சி பதிலீடுகள் உருவாக்கப்பட்டன, மூன்று தொழில்நுட்ப கைமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன மற்றும் மேலதிகமாக தொழில்நுட்பக் கைமாற்றங்கள் குறித்து கைத்தொழிலுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுகின்றது. • பலாப்பழம், உறைந்த பழங்கள் மற்றும் மரக்கறிப் பதப்படுத்தல் மீது உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைகளை இலக்காகக் கொண்டு

	வணிகமயமாக்கலையும் இலக்காகக் கொண்ட ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றக் கருத்திட்டங்கள்	NCDகளைத் தணிப்பதற்கான புதுமையான உணவு உருவாக்கம், குறைத்துப் பயன்படுத்தப்படும் உணவுப் பயிர்கள்/மூலிகைகள் ஆகியவற்றிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப்பொருட்கள்.	நான்கு தொழில்முனைவோர் நிறுவப்பட்டனர். • பாரம்பரிய அரிசி மற்றும் பயன்படுத்தப்படாத தானியங்கள் (5 உற்பத்திப்பொருட்கள்) ஆகியனவற்றைப் பயன்படுத்தி ஓர் ஆரோக்கியமான காலை உணவு உருவாக்கப்பட்டதுடன், ஓர் உற்பத்திப்பொருள் வணிகமயமாக்கப்பட்டது. • விசிறல் உலர்த்தும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பழ மற்றும் மரக்கறிப் பொடி உருவாக்கப்பட்டது. • கருத்திட்டங்களின் மூலம் நிறுவப்பட்ட புதிய சோதனை முறைகள் கை.தொ.நி. தொழில்நுட்பச் சேவைகளை வழங்குவதில் பயன்படுத்தப்படுகின்றன.
		• கொவிட்-19-ஐ தணிப்பதற்கான நோயெதிர்ப்பு ஊக்கிகள் உருவாக்கப்பட்டன.	• நோயெதிர்ப்பு ஊக்கிகளாக கொத்தமல்லி, இஞ்சி, மஞ்சள் மற்றும் பிற மருத்துவத் தாவரங்கள் ஆகியன மீதான அடிப்படையில் 10க்கும் மேற்பட்ட உற்பத்தித் தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டதுடன், இந்தத் தொழில்நுட்பங்கள் கைமாற்றப்படுவதற்கு தயாராக உள்ளன.
	2.2 சேதன உணவு முன்னேற்றத்தை பிரபலப்படுத்துதல்	• சேதன-அடிப்படையிலான பூஞ்சைக்கொல்லி மற்றும் பூச்சிக்கொல்லி வளர்ச்சியில் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றக் கருத்திட்டங்கள் நடத்தப்பட்டன. ஒரு உயிரகபூச்சிக்கொல்லி உருவாக்கப்பட்டதுடன், அது தொழில்நுட்பக் கைமாற்றத்திற்குத் தயாராக உள்ளது. • சேர்க்கை இல்லாத உணவு தயாரிப்பின் முன்னேற்றம். • சமையலறை கழிவுகளை அப்புறப்படுத்த ஒரு உயிரகஉரம் தயாரிக்கும் உரமாக்கி வடிவமைக்கப்பட்டுள்ளது.	• சேதன அடிப்படையிலான பூஞ்சைக் கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் ஆகியன மீதான இரு ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றக் கருத்திட்டங்கள் நடந்து வருகின்றன. • பூச்சிக்கொல்லி எச்சப் பகுப்பாய்வுக்காக சுமார் 150 மாதிரிகள் ஒவ்வொரு மாதமும் கை.தொ.நி. எச்சப் பகுப்பாய்வு ஆய்வகத்தில் மேற்கொள்ளப்பட்டன. • சேர்க்கை இல்லாத உணவுத் தயாரிப்பு மேம்பாடு குறித்த ஒரு கருத்திட்டம் நடந்து கொண்டிருக்கிறது. • மக்கும் உணவுக் கழிவுகளிலிருந்து 24 மணி நேரத்திற்குள் உரம் தயாரிக்க வீட்டு உரம் தயாரிக்கும் கருவியை உருவாக்கப்பட்டதுடன், தொழில்நுட்பம் கைமாற்றத் தயாராக உள்ளது. • சேதன உர சோதனை, உயிரகபூச்சிக்கொல்லி சோதனை மற்றும் பாசன நீரின் தர சோதனை ஆகியவற்றுக்கான ஆய்வக வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
	2.3 எல்லா வயதினருக்கும் தோதான உணவுப் பழக்கங்களை ஊக்குவித்தல்	• தொழில்நுட்ப செயல்அரங்குகள் மூலம் தோதான உணவு பதப்படுத்தும் நுட்பங்களை அறிமுகப்படுத்தியது. • உயர்நிலை சந்தைகளைக் கைப்பற்றும் வகையில் விதாத தொழில்முனைவோரின் உணவு உற்பத்திப்பொருட்களைத் தரமுயர்த்துதல். • கொவிட்-19 தொற்றுநோய் காலத்தில் உணவுத் தொழில்களுக்கு முறையான பதப்படுத்தல் நுட்பங்களைப் பயிற்றுவித்தல்.	• மதிப்பு கூட்டுதலுக்கான தோதான உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பங்களுடன் கைத்தொழிலைச் சித்தப்படுத்துவதற்காக 75க்கும் மேற்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் உணவுத் தொழில்நுட்பப் பிரிவினால் நடத்தப்பட்டது. • உணவுத் தரத்தை கவனத்திற்கெடுத்தும் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை/தரநிலைகளை அறிமுகப்படுத்தியும் விதாத தொழில்முனைவோரின் 100க்கும் மேற்பட்ட உணவுப் பொருட்கள் மேம்படுத்தப்பட்டன. • வெவ்வேறு உணவுக் கைத்தொழில்களில் இருந்து பங்கேற்பாளர்களுக்கு இரண்டு பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன
	2.4 நிலையான சூழல் கொள்கையின் மூலம் காற்று, நீர் மற்றும் மண் ஆகியன மாசுபடுவதைத் தடுப்பதன்	• காற்றின் தரச் சோதனைப் பகுப்பாய்வு நடத்தப்பட்டதுடன், சோதனை அறிக்கைகள்	• காற்றின் தரக் கண்காணிப்பு மீது 500க்கும் மேற்பட்ட சேவைகள் நடத்தப்பட்டன. • கைசுத்திகரிப்பான்கள், தொற்றுநீக்கிகள்,

	மூலம் ஆரோக்கியமான சூழலை உருவாக்குங்கள்	வழங்கப்பட்டன. • காற்றின் தரக் கண்காணிப்பு, சூழல் மாசுபாடு மற்றும் கட்டுப்பாடு மற்றும் சூழல் தாக்க மதிப்பீடுகள் போன்றவற்றிற்காக கைத்தொழிலுக்கான உசாவுகை மற்றும் ஒப்பந்தக் கருத்திட்டங்கள் ஆகியன நடத்தப்பட்டன.	முகமூடிகள் மற்றும் மூலிகை உற்பத்திப் பொருட்களுக்கான சோதனைச் சேவைகள் மேற்கொள்ளப்பட்டன. குடிநீரின் தரம், மண் மற்றும் உரங்கள் பற்றிய சோதனை மேற்கொள்ளப்பட்டு, 2,000க்கும் மேற்பட்ட மாதிரிகள் பகுப்பாயப்பட்டன.
	2.5 சுதேச மருத்துவம் மற்றும் ஆயுர்வேதம் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றம்	• சுதேச மருத்துவ மேம்பாட்டில் இரண்டு ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றக் கருத்திட்டங்கள் நடந்து வருகின்றன. • தேனில் கலப்படத்தை மதிப்பிடுவதற்கான ஒரு சோதனைக் கருவி வணிகமயமாக்கப்பட்டது. • கொவிட்-19க்கு தீர்வு காண மூலிகை அடிப்படையிலான வாய் கழுவி உருவாக்கப்பட்டது. மூலிகை அடிப்படையிலான வாய் கழுவி சோதிக்கப்பட்டதுடன், அதன் செயல்திறன் கொரோனா வைரஸ் மற்றும் சளிக்காய்ச்சல் வைரஸ் ஆகியவற்றுக்கு எதிராக உறுதி செய்யப்பட்டது. • கை சுத்திகரிப்பான்கள் மற்றும் பிற தொடர்புடைய தொழில்நுட்பங்கள் ஆகியன கொவிட்-19 தொற்றுநோய்க்கு பதிலளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டன. • ஆயுர்வேத பதிவைப் பெறுவதற்கு வாடிக்கையாளர்களின் வேண்டுகோளின் பேரில் ஆயுர்வேத சூத்திரங்கள் சோதனை நடத்தப்பட்டதுடன், அழகுசாதனச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.	• கொவிட்-19க்கு எதிராக 20க்கும் மேற்பட்ட மூலிகை சார்ந்த பராமரிப்பு உற்பத்திப்பொருட்கள் உருவாக்கப்பட்டன. • கலப்படத்தைக் கண்டறிய சோதனைக் கருவியை தேன் கைத்தொழில் தற்போது பயன்படுத்துகிறது. • உற்பத்திப்பொருட்களின் பக்டீரியா எதிர்ப்பு மற்றும் வைரஸ் எதிர்ப்பு பண்புகள் சோதிக்கப்பட்டதுடன், மூலிகை வாய்கழுவி தொழில்நுட்பம் கைமாற்றத்திற்கு தயாராக உள்ளது. கை சுத்திகரிப்பு தயாரிப்பில் தொழில்நுட்ப கைமாற்றசெயலரங்குகள் மேற்கொள்ளப்பட்டன. • மதுசார அடிப்படையிலான திரவ கை சுத்திகரிப்பான், மதுசார அடிப்படையிலான மூலிகை திரவ கை சுத்திகரிப்பான், மதுசார அடிப்படையிலான மூலிகைக் கூழ் கை சுத்திகரிப்பான், மூலிகை வாய்கழுவி, ஹரன்காஹா கை சுத்திகரிப்பான் விசிறல், காற்று சுத்திகரிப்பான், பக்டீரியா எதிர்ப்பு கை கழுவுதல்/நுரை கழுவுதல், தேங்காய் எண்ணெய் அடிப்படையிலான உயிரக மேற்பரப்பு தொற்றுநீக்கி, தேங்காய் எண்ணெய் அடிப்படையிலான மேற்பரப்புகிருமி நீக்கம் செய்யும் உயிரக பழங்கள் மற்றும் மரக்கறி கழுவி, தேங்காய் எண்ணெய் அடிப்படையிலான உயிரக ஒளிபுகவல்ல சவர்க்காரம், தேங்காய் எண்ணெய் சார்ந்த உடல் கழுவுநீர், தேங்காய் எண்ணெய் அடிப்படையிலான உயிரக ஈர துடைப்பான்கள், முருங்கை எண்ணெய் தைலம், முருங்கை எண்ணெய் விசிறல், முருங்கை மலமிளக்கிக் கலவை, பூசணி அடிப்படையிலான சுகாதார உற்பத்திப்பொருட்கள், மூலிகை எறிவு நோய் எதிர்ப்பு சக்தி ஊக்கிகள், மிகையொளி கூருணரி தன்னிச்சையான சுத்திகரிப்பான டிஸ்பென்சர் ஆகியவை உருவாக்கப்பட்டன • மூலிகை தொடர்பான குடிபானங்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் உருவாக்கப்பட்டன. • காலத்தின் போது 400க்கும் மேற்பட்ட சோதனைச் சேவைகள் மேற்கொள்ளப்பட்டன.
03	**அத்தியாயம் 5: மக்கள்-மையப் பொருளாதாரம்** **கை.தொ.நி. செயல்பாடுகள்:** **3.1 அறுவடைக்குப் பிந்திய இழப்பு குறைப்பு** **3.2 விவசாயப் புத்தாக்கத்திற்கான ஆராய்ச்சி**	• அறுவடைக்குப் பிந்திய நஷ்டத்தைக் குறைத்தல் மற்றும் பயிர்களுக்கு மதிப்புக் கூட்டல் ஆகியன குறித்து கைத்தொழில்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் பயிற்சி நிகழ்ச்சிகள், வலைதளங்கள் மற்றும் அழைக்கப்பட்ட சமர்ப்பணங்கள் நடத்தப்பட்டன. • அறுவடைக்குப் பிந்திய இழப்பைக் குறைப்பது மீது பாராளுமன்ற உப குழுவுக்கு பங்களிக்கப்பட்டது. • புதிய தொழில்முனைவோருக்கு	• அறுவடைக்குப் பிந்திய இழப்பைக் குறைத்தல் மற்றும் மதிப்புக் கூட்டல் ஆகியன தொடர்பாக நான்கு பயிற்சிக் கருத்திட்டங்கள் மற்றும் ஒரு வலையரங்கம் நடத்தப்பட்டது. • ஏற்றுமதி மற்றும் பல்பொருள் அங்காடிகளை இலக்காகக் கொண்டு அறுவடைக்குப் பிந்தியநெறிமுறைகளை அறிமுகப்படுத்த ஐந்து தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன – கைத்தொழிலைச் சேர்ந்தவர்கள் மற்றும் புதிய தொழில்முனைவோர் என சுமார் 50 பங்கேற்பாளர்கள் திட்டங்களால்

		கைத்தொழிலுக்காக அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம், குளிர் சங்கிலி முகாமைத்துவம், குறைந்தபட்ச பதப்படுத்தல் மற்றும் உறைந்த மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பழங்கள் மற்றும் மரக்கறி தொழில்நுட்பங்கள் ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டன. • பலா, பூசணி வாழைப்பழம் மற்றும் மீன் ஆகியவற்றின் அறுவடைக்குப் பிந்திய இழப்பைக் குறைக்கின்ற அதே வேளை, ஆரோக்கியமான உணவுப்பொருட்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவது குறித்த ஆராய்ச்சி.	பயனடைந்தனர். • சொல்லப்பட்ட விவசாயப் பண்டங்கள் மீதான அடிப்படையில் சுமார் 30 புத்தாக்க உற்பத்திப்பொருட்கள் உருவாக்கப்பட்டன. • பலாப்பழம் அடிப்படையிலான உற்பத்திப்பொருட்கள் மீது நான்கு புதிய கைத்தொழில்கள் நிறுவப்பட்டுள்ளன. • மாம்பழக் கூழ், முதிர்ச்சியடையாத பலாப்பழ தகரத்திலடைத்தல், குறைந்த அளவு பதப்படுத்தப்பட்ட பலாப்பழம் மற்றும் தெளிக்கப்பட்ட உலர்ந்த பழங்கள் ஆகியவற்றில் ஆறு முன்னோடி அளவிலான ஆய்வுகள் நடத்தப்பட்டன. • அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவம் மற்றும் மதிப்பு கூட்டல் மற்றும் விவசாய புதுமாற்றம் ஆகியன தொடர்பாக 50க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப கைமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.
	• **இறப்பர் மீது ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றம்**	• இறப்பரின் வெப்ப கடத்துத்திறனை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சி.	• காரீயம் அடிப்படையிலான நனோகூட்டமைவைப் பயன்படுத்தி இறப்பர் அனல் கடத்துத்திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.
	• **கறுவா மீது ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றம்**	• கறுவா மதிப்பு கூட்டல் மீதான ஆராய்ச்சி	• ஸ்ரீ விஜய மற்றும் ஸ்ரீ கெமுனு அதிக விளைச்சல் தரும் கறுவா வகைகளின் (Cinnamomum zeylanicum Blume) ஊட்டச்சத்து, செயல்பாட்டு மற்றும் ஆரோக்கிய நன்மைகள் நிறுவப்பட்டன. • கறுவா விதையுறைகள் உருவாக்கப்பட்டதுடன், வணிகமயமாக்கலுக்கு தொழில்நுட்பங்கள தயாராக உள்ளன. • கறுவா இணைக்கப்பட்ட மூலிகை அழகுசாதனப் பொருட்கள் உருவாக்கப்பட்டதுடன், தொழில்நுட்ப கைமாற்றத்திற்கு தயாராக உள்ளது.
04	**அத்தியாயம் 6: தொழில்நுட்ப அடிப்படையிலான சமூகத்தை நிறுவுதல்** (உயிரகதொழில்நுட்பம், நனோதொழில்நுட்பம், மின் தொழில்நுட்பம் ஆகியன தொடர்பான ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றங்கள், தொழில்நுட்ப கைமாற்றங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றச் சேவைகள்)	• உயிரகதொழில்நுட்பம், நனோதொழில்நுட்பம், மின் தொழில்நுட்ப புத்தாக்கங்கள் ஆகியன மீது ஆராய்ச்சியை நடத்துதல்	• PCR-அடிப்படையிலான உணவுச் சோதனை, டெங்கு வைரஸிற்கான ஒருவித்து பிறபொருளெதிரியின் மேம்பாடு, மோர் அடிப்படையிலான மதிப்புக்கூட்டப்பட்ட செயல்பாட்டிலான குடிபான மேம்பாடு போன்றவற்றில் கவனம் செலுத்தி, ஒன்பது உயிரகதொழில்நுட்ப புத்தாக்கங்கள் தொடர்பான கருத்திட்டங்கள் நடந்து வருகின்றன. • காரீயம், இயற்கை இறப்பர் கலவை மற்றும் மின்முனை ஆகியன மீது உருவாக்கப்பட்ட மூன்று உற்பத்திப்பொருட்கள் செயல்பாட்டில் உள்ளன. • AC/DC பக்கவழி மற்றும் கம்பியற்ற ஈரப்பதன் மற்றும் வெப்பநிலை கண்காணிப்பு அமைப்பு வடிவமைக்கப்பட்டு, உருவாக்கப்பட்டது. • காது திரையிடல் சாதனத்தை சரிபார்க்க மருத்துவத்திற்குரிய சோதனை நடத்தப்பட்டது. • மனித-யானை மோதலை நிவர்த்தி செய்ய முன்கூட்டிய எச்சரிக்கை அலாரம் அமைப்பு உருவாக்கப்பட்டதுடன், ஏற்கனவே வணிகமயமாக்கப்பட்டு வருகிறது.
		• ஆராய்ச்சி வெளியீடுகள், ஆக்கவுரிமைகள் மற்றும் பிற விஞ்ஞானம் சாதனைகள்.	• 49 சகபாடி-மதிப்பாயப்பட்ட சஞ்சிகை வெளியீடுகள். • 70 தொடர்பாடல்கள்/சாராம்சங்கள். • 02 ஆக்கவுரிமைகள் பெறப்பட்டன.

			• 05 ஆக்கவுரிமைகள் பிரயோகிக்கப்பட்டன. • 02 தேசிய விருதுகள். • உத்தேசமான தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் பரிமாற்றத்திற்காக 100க்கும் மேற்பட்ட கைத்தொழில் இணைப்புகள். • சர்வதேச பல்கலைக்கழகங்கள், கைத்தொழில், அமைச்சு மற்றும் தொழில்நுட்ப கூட்டாண்மைக்கான வேறு அதிகார சபைகள் ஆகியவற்றுடன் 14 ஒப்பந்தங்களிலும் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும் கை.தொ.நி. கைசாத்திட்டது. • 'செழிப்பு மற்றும் சிறப்பின் காட்சிகள்" தேசிய முன்னுரிமைப் பகுதிகளைக் குறிக்கும் ஐம்பத்திரண்டு புதிய ஆராய்ச்சி முன்மொழிவுகள் நிதி கோரி சமர்ப்பிக்கப்பட்டன. இந்த முன்மொழிவுகள் உணவு தொழில்நுட்பம், மூலிகை தொழில்நுட்பம், இரசாயனத் தொழில்நுட்பம், உயிரகதொழில்நுட்பம், சூழல் தொழில்நுட்பம் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் பொருள் தொழில்நுட்பம் ஆகியன தொடர்பானவையாகும்.
		• நோக்கம் விரிவாக்கம் மற்றும் கை.தொ.நி.இல் புதிய ஆய்வகங்களை நிறுவுதல்.	• யுன்னான் கிராமிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப சேவை நிலையம், யுன்னான் விவசாய பல்கலைக்கழகம் மற்றும் குன்மிங் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் சீனா-இலங்கை கூட்டு உயிரகதொழில்நுட்ப ஆய்வகம் - உள்ளக அலங்காரம் முடிக்கப்பட்டு, உபகரணங்களை இயக்குவதற்காக சீன பேராளர் குழுவுக்காக காத்திருக்கப்படுகிறது. • தேசிய LMO/GMO ஆய்வகத்தை நிறுவுதல்: ஆய்வக உள்ளக வடிவமைப்பு முடிந்துள்ளதுடன், சூழல் அமைச்சு மற்றும் FAO ஆகியவற்றின் கூட்டுத் கருத்திட்டத்தின் மூலம் உபகரணங்கள் பெறப்படுகின்றன. • பொதிப்படுத்தல் சோதனை ஆய்வகத்தை தரமுயர்த்துவதன் மூலம் தேசிய பொதிப்படுத்தல நிலையத்தை நிறுவுதல் - சோதனை ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. • பெற்றோலியம் மற்றும் மசகு எண்ணெய் சோதனை ஆய்வகத்தை நிறுவுதல் - சோதனை ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. • STC மூலம் சதோச விற்பனை நிலையங்களுக்கு தர உத்தரவாதமளிக்கப்பட்ட மதுசார அடிப்படையிலான கை சுத்திகரிப்பான்களை வழங்குவதற்காக கை சுத்திகரிப்பு உற்பத்தி வசதி, நிறுவப்பட்டது - வெற்றிகரமாக வணிகமயமாக்கப்பட்டது.
		• பிற செயல்பாடுகள்: உள்நாட்டு கைத்தொழில்களுக்கும் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக்கும் ஆதரிப்பதற்காக சோதனைச் சேவைகள், உசாவுகை, ஒப்பந்தக் கருத்திட்டங்கள் மற்றும் பிற சேவைகள் ஆகியன கை.தொ.நி.இனால் பொறுப்பேற்கப்பட்டன	• கைத்தொழிலுக்கு ஆதரவாக 20,000க்கும் மேற்பட்ட சோதனைச் சேவைகள் மேற்கொள்ளப்பட்டன. • கைத்தொழிலுக்கு ஆதரவாக 1000க்கும் மேற்பட்ட ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.
05	**அத்தியாயம் 7: தேசிய இடஞ்சார்ந்த அமைப்பில் புதிய**	• நகர்ப்புற கழிவு முகாமைத்துவம், கைத்தொழில்சார் கழிவுநீர் மற்றும்	• இலங்கையில் அபாயகரமான கழிவுகளை உருவாக்கும் கைத்தொழில்கள் மீது பல

	அணுகுமுறைகள்	கழிவு நீர் முகாமைத்துவம்.	உசாவுகைகளை (100க்கும் மேற்பட்டவை) நடத்தியது. • காற்றில்லா செரிமானத்தைப் பயன்படுத்தி கோழி கழிவு நீர் சுத்திகரிப்புக்கான புதிய அணுகுமுறைகளை உருவாக்கியது.
06	**ஒரு நேர்மையான ஒழுக்கத்தையும் மற்றும் சட்டத்தையும் மதிக்கும் சமூகம்** விதாத தொழில்முனைவோர்/ பெண்கள் அதிகாரமளித்தல் பயிற்சி	• விதாத மற்றும் சமூர்த்தி தொழில் முயற்சியாளர்களுக்கான தொழில்நுட்ப பயிற்சி. • பெண்கள் அதிகாரமளிக்கும் திட்டங்கள்.	• 100க்கும் மேற்பட்ட விதாதா தொழில்முனைவோருக்கு 20 தொழில்நுட்பக் கைமாற்றச் செயலரங்குகள் மற்றும் உற்பத்தி தரமுயர்த்தல் ஆகியன நடத்தப்பட்டன. • பெரும்பாலான விதாத தொழில்முனைவோர் பெண்களாக இருப்பதால், நாட்டில் பெண்களின் அதிகாரமளிப்புக்கு பங்களிக்கப்பட்டது.

